RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1816

# தமிழ் பெண் கவிஞர்கள் தங்கள் கவிதைகளில் பாடியுள்ள சமூகம் சார்ந்த பிரச்சினைகள்

**கோ. நிர்மலாதேவி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, பூ.சா.கோ.கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-641014, தமிழ்நாடு, இந்தியா.

# Social Issues by Tamil Women Poets in their Poems

**G. Nirmaladevi** [a, *]

[a] Department of Tamil, PSG College of Arts & Science, Coimbatore-641014, Tamil Nadu, India

* Corresponding Author: nirmaladeviramesh96@gmail.com

Received: 13-07-2022
Revised: 30-09-2022
Accepted: 08-10-2022
Published: 08-12-2022

Check for updates

**ABSTRACT**

Poetry is aesthetic, both readers and listeners enjoy its style. Poetry always requires concept, emotion, imagination and form. Through poetry writer can touch people's emotions. As the culture of the people changes from time to time, poetry also changes accordingly. These changes are always evaluated by the question whether the changes in poetry relates to the present changes that took place in society. Earlier writers had an opinion that poetic richness do not have anything to do with social sentiments and political leanings. First the Vanampaadi poets added about society and miseries happening in the society in their poems. Following this metaphor, simile, allusion and imageries are used in the poetry. Many ideas that have been buried due to various methods of evaluation are now beginning to emerge. Due to this, we are getting a lot of information. This article examines about the social issues that poets have sung in their poems.

**Keywords:** Inequality, Woman as Object, Myths of Modernity, Innovative Women, Development

## முன்னுரை

குடும்ப அமைப்பின் தலைவியாக இருப்பவள் பெண். ஆண் இல்லாத ஒரு குடும்பத்தை ஒரு பெண்ணால் அழகாக வழிநடத்த முடியும். ஆனால் அது முடியாது. இந்த உலகத்தில் எங்கும் பரம்பொருளாய் பெண் நிறைந்து காணப்படுகிறாள். தற்காலத்தில் பெண்ணியம் சார்ந்த கவிஞர்கள் தமது கவிதைகளில் இந்த சமுதாயத்தில் நடைபெறும் அவலங்களை மிகவும் அழகாக தம்முடைய கவிதைகளில் சொல்லிச் செல்கிறார்கள். அவ்வகையில் நவீன கவிதைகளில் பெண்ணியக் கோட்பாடு என்ற தலைப்பில் பெண் கவிஞர்கள் தங்கள் கவிதைகளில் பாடியுள்ள சமூகம் சார்ந்த பிரச்சினைகளை குறித்து ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## கோட்பாடு - விளக்கம்

கோட்பாடு என்பதை ஒரு கருத்தாக்கம் என்று பொருள் கொள்ளலாம். அதாவது கற்பு என்பது ஒரு கோட்பாடு. நடைமுறை வாழ்வில் நாம் ஏற்றுக் கொண்டுள்ள கோட்பாடு. இதன் வாழ்வியல் முறை என்பது, ஒருவனுக்கு ஒருத்தி என்பதாகும். ஓர் ஆணும் ஒரு பெண்ணும் மட்டுமே சமுதாய

நிகழ்வாகிய திருமணச் சடங்கின் மூலம் இணைந்து வாழும் வாழ்க்கையே கற்பு கோட்பாடு ஆகும். இவ்வாறு ஒவ்வொரு கொள்கையின் சிந்தனைத் தெளிவினாலும் ஏற்றுக் கொள்ளல் என்பதாலும் சமுதாய நிலைப்பாட்டினாலும் கோட்பாடுகள் உருவாகின்றன. மேலை நாடுகளில் மரபு சார்ந்த பெண்ணியம் என்ற கோட்பாடு உருவாகிவிட்ட நிலையில் நாம் பெண்ணியம் என்பது ஆணுக்கு எதிரானது இல்லற வாழ்க்கைக்கு முரணானது என எண்ணுவது பேசுவது நடப்பது தவறான போக்கு ஆகும். இவ்வாறு இன்றைய புதுக்கவிதைகள் சமுதாயத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை அவலங்களை பிரச்சினைகளை சுட்டிக் காட்டுவதோடு நின்றுவிடவில்லை. அடங்கிக் கிடக்கும் ஆமைகளாய் ஒடுங்கிக் கிடக்கும் அடிமைகளாய் இருந்த நிலையில் இருந்து முழுவதுமாய் மாறியுள்ளனர். தம்மை புறக்கணிக்க நசுக்க நினைக்கும் சமுதாயத்தை எதிர்த்துக் குரல் கொடுக்கும் அளவிற்குக் கருத்துச் சுதந்திரம் துணிவு இவற்றைப் பெற்றுள்ளனர் பெண்கள் என்பதையும் உணர்த்தி நிற்கின்றன. பெண்மை என்பது அடிமையின் அடையாளம் அல்ல. பெண்கள் மதிக்கப்படுதல் வேண்டும். போகத்திற்கு மட்டும் பெண்கள் உரியவர்கள் என்ற எண்ணம் ஒழிய வேண்டும். கல்வி, வேலை, அரசியல், ஆட்சியில் சம உரிமை, பெண் குழந்தைகள் பாதுகாப்பு கிடைக்கப்பெறுதல் வேண்டும். இவை கிடைக்கத்தான் காலந்தோறும் பெண்கள் போராடி வந்துள்ளனர். பாரதியார் வீட்டிற்குள்ளே பெண்ணைப் பூட்டி வைக்கும் விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார் என்று சொல்லும் நிலை உருவாக வேண்டும் என்று கனவு கண்டார் பாரதியார். ஆனால் அவர் காண விரும்பிய பெண் விடுதலை இன்னும் முழுமையாக கிடைக்கப்பெறவில்லை. பெண் என்பவள் பிறந்தது முதல் முதுமை வரை ஆணையே சார்ந்திருக்கக் கூடியவளாக இருக்கிறாள். காலம் காலமாக சமுதாயத்தில் நிலவி வரும் பெண்ணின் நிலை இது.

## சமுதாய மதிப்பு

சமூகம் என்பது மனிதன் கூட்டமாக கூடி வாழ்வதைக் குறிப்பதாகும். நமது ஆற்றங்கரை நாகரிகம் தோன்றிய பின்னரே சமூகம் என்ற ஒன்று தோற்றம் பெற்றது எனலாம். இதன் அகப்புறச் செயல்பாடுகளைக் கொண்டே ஒரு சமுதாயம் எவ்வகைப்பட்டது என்பதை நாம் கணித்தறிய முடியும்.

'உயர்திணையாகக் கருதப்படும் மக்களினம் கூறுபாடில்லதது என்றும் ஏனைய அஃறிணைப் பொருட்கள் கூறுபாடுள்ளன' (தொல் - சொல்லதிகாரம்) என்றும் கூறுவார் இளம்பூரணர். ஆனால் இன்றைய மக்கள் இனம், சாதி, மொழி என்ற பல கூறுகளாகச் சிதறிக் கிடப்பதை நாம் காண முடிகிறது. இவை அனைத்தையும் பற்றிய மதிப்பீடுகளை அந்தந்தக் காலகட்டத்தில் வாழ்ந்த படைப்பாளர்களையும், படைப்பிலக்கியங்களையும் கொண்டே அக்காலச் சமுதாயத்தின் நிறைகுறைகளை நாம் அறிந்து கொள்ள இயலும்.

புதுக்கவிஞர்கள் சமுதாயக் கட்டமைப்பை வெளிப்படுத்திக் காட்டுவதிலும், தனி மனித உணர்வுகளையும், சமுதாய செயல்பாடுகளையும் அவற்றிலுள்ள நிறை குறைகளையுமே மிகுதியாகச் சுட்டியுள்ளனர். தாழ்ந்து கொண்டிருக்கும் சமுதாயத்திற்கு விழிப்புணர்வு ஊட்டும் வகையிலேயே கவிதையின் வெளிப்பாடுகள் அமைந்துள்ளன எனலாம். பகுத்தறிவு வளர்ச்சியின் காரணமாக கண்மூடித்தனமான மூடநம்பிக்கைள் சமூக முன்னேற்றத்தில் தடைகற்களாகக் கருதப்பட்டன. அவற்றைக் களைய வேண்டும் என்ற எண்ணம் பெண் படைப்பாளர்களுக்கு இருந்தது.

உலகில் விஞ்ஞான வளர்ச்சி நிகழ்ந்து வந்தாலும், சமூகத்தில் மாற்றங்கள் தொடர்ந்து கொண்டே இருந்தாலும், பொருளியல் வளர்ச்சி உயர்ந்து வந்தாலும் பெண்கள் நிலையில் மாற்றங்கள் ஏதும் இல்லை எனலாம். பெண்கள் படிப்பறிவு பெற்று பணிகளுக்குச் சென்ற நிலையிலும் சமையலறை என்ற சமூகச் சிறையில் இருந்து இன்னும் விடுபடமுடியவில்லை. பிறப்பு முதல் பேதம் பார்த்து வளர்க்கப்படுகிறாள். இந்த நூற்றாண்டிலும் ஆணுக்கு ஒரு நியாயம் பெண்ணுக்கு ஒரு நியாயம் ஆரம்பத்தில் அம்மாவிற்கு உதவி செய்பவராக, அண்ணன் தம்பிக்கு எடுபிடியாக அவளது குடும்ப வாழ்க்கை அவளை மிகவும் கணம் பட வைக்கிறது. அதனைத் தொடர்ந்து கணவனுக்கு அடிமையாகவும், தான் பெற்ற பிள்ளைகளுக்குப் பணியாளராகவும் வாழ்க்கையைத் துறந்து மரணத்தைத் தழுவி விடுகிறார்கள். பெண்கள் வேலைக்குச் செல்வதும், கல்லூரிக்குப் போவதும்,

இருசக்கரவாகனங்களை இயக்குவதும் சமூகத்தின் தெருக்களில் கொஞ்சம் கொஞ்சம் நடமாடுவதும் இவைகளே பெண்களுக்கு ஏற்பட்ட மிகப்பெரிய மாற்றமாகச் சமூகம் உணர்த்துகிறது. அதன் அடிப்படையில் ஏற்றத்தாழ்வுகளற்ற சமூகம் அமைய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் மகளிர் தங்கள் கவிதைகளைப் படைத்துள்ளனர் படைத்து வருகின்றனர். ஏறத்தாழ அனைத்து பெண் கவிஞர்களுமே தங்களது படைப்புகளில் ஏதேனும் ஒரு நிலையில் சமூகம் சார்ந்து அல்லது சமூகச் சிந்தனையைச் சார்ந்து தம்முடைய படைப்புகளைப் படைத்து வருகின்றனர்.

## சாதி

சாதி என்பது மனித இனத்தைப் பாகுபடுத்திக் காட்டக் கூடிய ஒரு கருவி. மூவாயிரத்திற்கும் மேற்பட்ட சாதிகள் உள்ளன. வர்ணாசிரமதர்மம் என்ற கோட்பாட்டின் கீழ் மக்கள் நால்வகை வர்ணங்களாகப் பிரிக்கப்பட்டு உள்ளனர். பல்வேறுபட்ட சாதிகளும், பல பிரிவுகளும், குழு மோதல்களும், சண்டைகளும், வெறுப்புணர்வுகளும், உயர்வு தாழ்வென்ற ஒவ்வாத தன்மையும் அந்தக் காலம் தொட்டே இருந்து வருகின்றன. சமுதாயத்தில் எவ்வளவோ மாறுதல்கள் முன்னேற்றங்கள் ஏற்பட்டபோதும் சாதிப்பிரிவு மட்டும் மாறவில்லை. நான்காக இருந்த சாதிகள் நாலாயிரமாக உயர்ந்துள்ளன. சங்க காலத்தில் தொழில் அடிப்படையில் மக்கள் வகைபடுத்தப்பட்டனர். இன்று சாதிகள் அடிப்படையில் தொழில் செய்யும் நிலைமை உருவாகிவிட்டது. சாதிகள் தனித்தனி அமைப்புகளை ஏற்படுத்திக் கொண்டு தனித்தனி இயக்கமாக இயங்கி வருகிறது. இவ்வாறாக உள்ள சாதிப்பிரச்சனைகளைப் பெண்கள் தங்கள் படைப்புகளில் காட்டியுள்ளனர்.

"சங்கம் வைத்துத்

தமிழை வளர்த்தது

அந்தக் காலம்

அது அந்தக் காலம்

சங்கம் வைத்து

சாதி வளர்ப்பது

இந்தக் காலம்

அது இந்தக் காலம்"

என்று கவிஞர் மதுமாலிகா எடுத்துரைக்கிறார் (Mathu Maalika, 1982). சங்க காலம் பொற்காலம் என்று சொல்வதற்கேற்ற வகையில் மக்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினர். மக்கள் அனைவரும் உயர்வு தாழ்வுகளின்றி கலந்து பழகி வந்தனர். இன்று போட்டி, பொறாமை, உயர்வு, தாழ்வு என்ற எண்ணங்கள் மக்கள் மனதில் தோன்றி சாதி வெறியை மிகுதிப்படுத்தி வருகின்றன. தம் தம் சாதியினரை உயர்த்த வேண்டும் என்பதற்காகவே இக்காலத்தில் சங்கத்தை வளர்க்கிறார்கள். சாதி என்பது எளிதில் அழிந்து விடக்கூடியதன்று. அது வெட்டவெட்டத் தழைக்கும் பலமான நச்சுக்கொடி போன்றது. இதனை அரசும் மக்களும் இணைந்து கடுமையான சட்டங்களை இயற்றி ஒழிக்கப்பட வேண்டும். ஆனால் அரசியலில், கல்வியில், வேலைவாய்ப்பில் என்று சாதியை சமூகத்தில் உயர்சாதியினரும் அரசும் தங்கள் பதவியை காப்பாற்றிக் கொள்வதற்காக வளர்க்கின்றது. இதனை,

"சாதிக்குத் தகுந்த

தீர்ப்புகள் சொல்லும்

ஊர்ப் பெரிசுகள்

கட்அவுட் விழுந்து

இடிந்து போன காவல்நிலையம்

குட்டிச் சுவருக்கு வர்ணம்

பூசிய மாதிரி புது மிடுக்கோடு

அமைச்சர் வந்து போன

எங்கள் ஊர்"

என்று கவிஞர் கனிமொழியின் கவிதை உணர்த்துகிறது (Kanimozhi, 1995).

## வறுமை

பொருளியல் அறிஞர்கள் பொருள்களை இன்றியமையாதவை, வசதிக்குரியவை, ஆடம்பரமானவை என மூவகைப்படுத்துவர். நமது சமுதாயத்தில் ஒரு பிரிவினருக்கு ஆடம்பரப் பொருளாகக் கருதப்படும் ஒரு பொருள் மற்றொரு பிரிவினருக்கு கேள்வி படாத பொருளாகக் கூட இருக்கலாம். இல்லையென்றால் அத்தியாவசியமானப் பொருளாகக் கூட இருக்கலாம். எனவே சமுதாயத்தில் ஒரு சில பிரிவினருக்கு தேவைக்குப் பொருள் கிடைக்கப் பெறாத நிலையே வறுமை எனப்படும். இந்த வறுமை நிலையே எல்லாவித துன்பங்களுக்கும் அடிப்படைக் காரணமாயிருக்கும் என்பதைப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் தோன்றிய மணிமேகலை நமக்கு உணர்த்துகிறது. இந்தப் பசியானது ஒருவனை எவ்வகை இழுக்குகளுக்கெல்லாம், இடங்களுக்கெல்லாம் கொண்டு சென்று நிறுத்தும் என்பதை,

"குடிப்பிறப்பு அழிக்கும், விழுப்பம் கொல்லும்

பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்

நாண்அணி களையும் மாண் எழில் சிதைக்கும்

பூண்முலை மாதரோடு புறங்கடை நிறுத்தும்

பசிப்பிணி என்னும் பாவி" (மணிமேகலை)

என்ற கவிதை உணர்த்துகிறது. மேற்குறிப்பிட்ட வரிகள் வறுமையும், பசியும் மனிதனை எத்தகைய இழிநிலைகளுக்கெல்லாம எடுத்துச் செல்லும் என்பதை உணர்த்துகிறது (Chithalai Chathanar, 1999).

பருவமழை பொய்த்து இயற்கை நம்மை ஏமாற்றும் காலங்களிலும், கடுமையான வெள்ளப்பெருக்கு போன்றவை நிகழும் காலங்களிலும் வறுமையால் வாடும் மக்கள் எல்லா நாட்டிலும் உண்டு. சுதந்திர இந்தியாவில் எத்தனையோ திட்டங்களை அரசு வகுத்துச் செயல்படுத்தியும் வறுமை என்ற ஒரு நிலையை யாராலும் அகற்ற முடியவில்லை. எத்தனையோ திட்டங்கள் மட்டும் தீட்டப்பட்டது. தீட்டப்பட்ட திட்டங்களுக்கானக் காலம் கடந்து போனதைத் தவிர எந்தத் திட்டங்களும் நிறைவேற்றப்படவில்லை என்பது நிதர்சனமான உண்மை. மணிமேகலையின் அட்சயப் பாத்திரம் இன்று மீண்டும் வந்து நாட்டு மக்களின் வறுமையைத் தீர்க்காதா என்ற வினாவை கவிதை வரிகள் முன் வைத்துள்ளது (Vijayalakshmi, 1982).

"பசியை நிதம் கண்டு

வறுமை புதை குழியில்

கண்கள் தேடுகின்றன

எங்கே மணிமேகலையென

யாப்பிலக்கணத்தில்

காப்பியம் பாட அல்ல கணக்கின்றிப் பெருகிட்ட

காய சண்டிகைகளான

உங்களுக்காய்"

அரசியல்வாதிகள் போலித்தனமான உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்வது அனைவருக்கும் தெரிந்து விடும் (Vijayalakshmi, 1982). ஆனால் ஏழைகள் அன்றாடம் பட்டினியால் வாழ வழியின்றி வாடி வதங்கிப் போய் கிடப்பது பலருக்கும் தெரியவில்லை. இதனை கவிஞர் சித்ராதேவி,

"ஏழையான நாங்கள்

பட்டினி கிடப்பது

பலர்க்குத் தெரியவில்லை

ஆனால்

அரசியல்வாதிகளின்

உண்ணாவிரதம் நாடு

முழுதும் தெரிகிறது"

என பாடுகிறார் (Chitra Devi, 1985). கந்தையானாலும் கசக்கிக் கட்டு, கூழானாலும் குளித்துக்குடி என்பது நமது சான்றோர் வாக்கு. ஆனால் இருப்பதோ ஒரே கந்தல் ஆடை. அதைக் கசக்கி கட்டினால் அது கிழிந்து கோவணமாகப் போய்விடும் என்பது நமது நாட்டின் மக்களின் வறுமை நிலையை மிகவும் அழகாகக் காட்டுகிறது.

## இயற்கை

இந்தப்பிரபஞ்சத்தின் ஒரு நெருப்புக் கோளம் பூமி. எரிமலைச் சிதறல், நிலநடுக்கம், போன்றவை கோடி முறை நிகழ்ந்து உள்ளன. இருப்பினும் கடல், மலை, உலக உயிர்கள், செடி கொடிகள், விலங்குகள் விரிவு பெற்றன. இதில் மனிதனே மையப்புள்ளி. பரிணாம வளர்ச்சியின் உச்சம். இயற்கையின் வரம் மனிதன். ஆனால் இந்த மனிதன் இன்று இயற்கையை மெல்ல மெல்ல அழித்து வருகிறான். இந்த அழிவினை பெண் கவிஞர்கள் தம் கவிதைகளில் சொல்லிச் செல்கிறார்கள். அழகியல் உணர்வு என்பது மனிதனின் வாழ்க்கையில் ஒரு பிரிவு. இயற்கை மனிதனுக்கு உணர்த்துகின்ற நெறி உழைப்பு. இயற்கை ஓயாமல் உழைக்கிறது. கதிரவன் வெளிச்சம் தருகிறது. வானம் மழை தருகிறது. நிலவின் தண்மை வாழ்வின் நெறியை மனிதனுக்குப் போதிக்கிறது. இயற்கையின் பின்னணியில் மனிதனை வைத்துப் பார்க்கும் போதுதான் மனிதனின் இடம் எது என உணர முடியும். கவிஞர் தேன்மொழியும் இயற்கையின் பின்னணியில் பல வினாக்களை முன்வைக்கிறார்.

"ஆலம் விழுதுகளில்

ஆடிப் பார்க்க வேண்டும் என்கிற

ஆசையையே தீர்க்காதவன்

வானவில்லை வளைத்து

வளையல் போட்டுக் கொள்ள

ஆசை இருந்தென்ன"

என்ற கவிதை இயற்கையோடு இயைந்த மனித வாழ்வில் உள்ள உன்னதத்தை எடுத்தரைக்கிறது எனலாம் (Chitra Devi, 2001). மனிதனின் இன்றையச் செயல்பாடு இயற்கைக்கு எதிரானதாக உள்ளது. இயற்கை வழியில் செல்லாமல் இன்று செயற்கை முறையில் அமைக்கப்படும் வாழ்வியக்கத்தைப் பெண் கவிஞர்கள் குறை கூறுகிறார்கள்.

"தலை சாய்த்து நிற்கும்

நெற் கதிர்களும்

குலை தள்ளிய

வாழைகளும்

வாழ்த்துச் சொல்ல

கழுகுகள் பறந்த

நீ

மீண்டும் பிறப்பாய்"

இயற்கை தன்னுடைய அழகை இழந்திருப்பதால் மனிதன் மிருகமாகிவிட்டான். மனிதன் மீண்டும் இயற்கையை இயற்கையாக மதிக்க ஆரம்பித்தால் மட்டுமே மனிதம் முளைக்கும். அதன் அடிப்படையில்தான் புதிய மனிதன் பிறப்பான் என்பதையே மேற்காணும் கவிதை காட்டுகிறது (Arundhati, 1989).

## அரசியல்

நமது சமுதாயத்தோடும் மக்களோடும் நெருங்கிய தொடர்புடையது, உறவுடையது அரசியல். சமுதாயத்தின் வளர்ச்சிக்கும், தேய்விற்கும் மற்ற பிற சீர்கேடுகளுக்கும் அரசியலே தலையாய காரணமாகிறது. புலவர்களும், அறிஞர்களும், நாடு நாட்டின் இயல்பு நாட்டை ஆள்பவன் இயல்பு ஆட்சி முறை என்பனபற்றித் தெறிவான இலக்கணத்தை வரையறுத்துள்ளனர்.

"அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா

மானம் உடைய தரசு" (திருக்குறள் 384)

என்று வள்ளுவரும் நல்ல தலைவனுக்குரிய இயல்பைப் பாடுகிறார் (Parimelzhagar, 2005). சமுதாய மாற்றங்களுக்குக் காரணமாக இருக்கக் கூடிய அரசியலை அந்த அந்தக் காலக்கட்டத்தில் படைப்பாளிகள் மிகவும் அழகாக கணித்துச் சொல்லிச் செல்கிறார்கள். இன்றையக் காலக்கட்டத்தில் நாம் பார்க்கும் இடமெல்லாம் வறுமை மட்டுமே தலைத் தூக்குகிறது. இந்த நாட்டில் வணிகத்திற்காக வந்த வெள்ளையன் அரசியல் நடத்தினான். ஆனால் அரசியல் நடத்த வந்த நம்மவர்கள் இன்று வியாபாரம் செய்கிறார்கள். பகல் கொள்ளையர்களும் பதுக்கல் காரர்களும் மட்டுமே இந்நாட்டில் அரசியல்வாதிகள் ஆக முடியும் என்ற நிலை இன்று நிலவுகிறது.

"வறுமைத் துப்பாக்கியின்

பசித் தோட்டாக்களால்

பலமுறை சுடப்படுகின்ற

ஏழை இந்தியனை

எண்ணியும் பார்க்காத

பதவிக் காமுகர்களின்

கையில்

இன்றைய இராச்சியம்"

என்று கவிஞர் மிகுந்த வருத்தத்தொடு சொல்லிச் செல்கிறார் (Uma maheswari, 1988).

## சுற்றுப்புறச்சூழல்

மனித இனத்தின் வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டு பல வகைகளில் மிக முக்கியமானது. அறிவியலின் அசுர வளர்ச்சியால் ஒரு பக்கம் சொல்ல முடியாத செல்வமும், இன்னொரு பக்கம் கணக்கிலடங்காதச் சீரழிவுகளும் விளைந்து இருக்கின்றன. மனிதனுக்கு வரலாறு காணாத வசதிகள் கொண்டு வந்த அறிவியல் அதே சமயத்தில் பல தீமைகளும், கேடுகளும் கொண்டு வந்துள்ளது. அந்தக் கேடுகளில் மிக முக்கியமானது சுற்றுப்புறச் சூழல் கேடாகும். இந்தச் சூற்றுப்புறச் சூழல் கேடு ஒரு நாட்டையோ அல்லது நாடுகளை மட்டுமோ பாதிக்கவில்லை. இந்த உலகம் அனைத்தையும் பாதிக்கிறது. எனவே இதனைத் தடுக்க அல்லது அதன் தீவிரத்ததைக் குறைக்க தங்களால் ஆன முயற்சியாகப் பெண்கள் சுற்றுப்புறச் சூழலின் பாதுகாப்பு குறித்தக் கவிதைகள் படைத்துள்ளனர்.

"மரங்களை அகற்றி

வானுயர்ந்த கட்டிடங்கள்

இடம் பெயர்ந்த பறவைகள்"

என மரங்கள் அழிக்கப்படுவதால் பறவைகள் மட்டும் இடம்பெயர்வதில்லை (Parimala Muthu, 1990). நம்முடைய எதிர்காலச் சந்ததியினரும் தான் என்பதை மேற்கண்ட கவிதை நமக்குத் தெளிவாகக் கூறுகிறது. மக்கள் தொகை பெருக்கம் ஆண்டு தோறும் பெருகி வருகிறது. மக்களின் அத்தியாவசியத் தேவைகளுக்கு மட்டுமின்றி ஆடம்பரத் தேவைகளுக்காகவும் பல வளங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. இந்த இயற்கை அழிவுகளால் சமநிலை பாதிக்கப்படுகிறது. இதைக் குறித்து மனிதர்கள் அனைவருக்கும் விழிப்பணர்வு தேவை என்பதை, கவிஞர் பொன்மணி வைரமுத்து உன் வீடு பளிங்கு போல தூய்மையானதாக இருந்தால் மட்டும் போதாது, பக்கத்து வீட்டில் குப்பைகளைக் கொட்டுவதை முதலில் நிறுத்து என்கிறார். அப்பொழுது சுற்றுப்புறச் சூழல் தானே காப்பாற்றப்படும்.

"உன் மனை அழகு

உன் மனம் அழுக்கு

என்னை நீ எங்கே

கொட்டப் போகிறாய்"

என்ற கேள்வியோடு முடியும் கவிதையில் மனிதர்கள் தங்களின் பொறுப்பற்ற செயல்களால் சுற்றுப்புறச் சூழலுக்கு எவ்வாறெல்லாம் கேடுகளை உண்டாக்குகின்றனர் என்பதைத் தெளிவுறுத்துகிறார் (Vairamuthu, 1991).

## கல்விமுறை

ஒரு சமூகம் என்பதை எவ்வாறு மதிப்பீடு செய்ய முடியும்என்றால் மக்கள் எந்தஅளவு கல்வி பெற்று இருக்கின்றனர் என்பதைப் பொருத்தது ஆகும். சமுதாய மக்கள் கல்வியறிவு பெற்றவர்களாக இருந்தால் மட்டுமே அச்சமூகம் பன்னோக்கு வளர்ச்சியை அடையமுடியும். அந்தக் காலம் தொட்டு இந்தக் காலம் வரை அரசு அதிகாரத்தை தன் கையில் வைத்திருந்தவர்கள் பெரும்பாலும் இதன் இன்றியமையாமையை நன்கு உணர்ந்தவர்களாகவே இருந்திருக்கின்றனர். அன்றை குருகுலக் கல்வியும், இன்றைய கல்வி திட்டமும் மக்களுக்கு எழுத்தறிவூட்டலை மட்டுமே மையநோக்கமாகக் கொண்டு விளங்கி வருகின்றன. கால மாற்றங்களுக்கு ஏற்பக் கல்வி முறையிலும் பலவகை மாற்றங்கள் ஏற்பட்டே வந்துள்ளன. பிச்சை புகினும் கற்கை நன்றே என்று கூறுகிறார்களே அன்றி கல்வி பயிற்றுவிப்பதில் உள்ள நடைமுறைச்சிக்கல்கள், கல்வியின் பயன்பாடு, பயனின்மை என்பன பற்றி மிகுதியாகக் கூறவில்லை. இதற்குக் காரணம் கல்வியை அவர்கள் தெய்வத்தோடு தொடர்புடையதாக ஆக்கிக்கொண்டதே ஆகும்.

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு

எழுமையும் ஏமாப் புடைத்"

என்று கூறும் வள்ளுவரும் கல்வியின் சிறப்புகளைக் கூறுகிறாரே அன்றி கல்வி பயிற்றுவிப்பதில் உள்ள சிரமங்களைக் கூறவில்லை (Parimelzhagar, 2005). பெண் கவிஞர்கள் கல்வி கற்பதில் உள்ள சிரமங்களை, கல்வி கற்பதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களையும், கல்வி முறையில் உள்ள குறைகளையும் தங்கள் படைப்புகளில் தெளிவாக எடுத்துரைக்கின்றனர். ஒரு காலகட்டத்தில் பட்டங்களை உயர்வாக மாணவர்கள் எண்ணியதுண்டு. ஆனால் இன்று தேர்வில் வெற்றிபெற்றதற்காக வழங்கப்படும் அனமதிச்சீட்டுக்களாகவே அவற்றைக் கருதுகின்றனர். கல்வியை ஒரு விபத்தாகவும், பல்கலைக்கழகம் தரும் பட்டம் அதற்கான நிவாரணமாகவும் கருத வேண்டியள்ளது. எதிர்கால சமுதாயத்தை உருவாக்கும் இளைய சிற்பிகளாம் மாணவர்கள் தாங்கள் பெறப்போகும் பட்டங்கள் எதற்கு உதவப்போகின்றன என்று அச்சம் கொள்கின்றனர்.

"இருட்டு குகை நூல்களெல்லாம்

அரித்தெடுத்தேன்

முதுபட்டம் பெறுவதற்கு

இப்போ

வயிற்றுக்குச் சோறு மட்டும்

ஒருவேளை நிச்சயமாச்" (Meenashi, 2012)

## முடிவுரை

புதுக்கவிஞர்கள் சமுதாயக் கட்டமைப்பை வெளிப்படுத்திக் காட்டவதிலும் தனிமனித உணர்வுகளையும், சமுதாயச் செயல்பாடுகளையும் அவற்றிலுள்ள நிறைகுறைகளையும் மிகுதியாகச் சுட்டியுள்ளனர். சாதி, மதம், பொருளாதாரம் போன்ற கூறுகளால் சமுதாயம் சிதறுண்டு கிடப்பதைத் தங்கள் கவிதைகளில் தெளிவுறுத்தி உள்ளனர். சாதி ஒழிக்கப்பட வேண்டும், வறுமை நீக்கப்பெற வேண்டும், நல்ல அரசுகள் அமைதல் வேண்டும். கல்வி முறை வியாபாரமாகப் பார்க்கப்படக் கூடாது. வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிதல் வேண்டும் போன்றவற்றைக் கூறி சமுதாயச் சிக்கல்கள் தீர இவைகள் நடைமுறைக்கு வர வேண்டும் என பெண் கவிஞர்கள் கூறுகிறார்கள். பிறரைச் சார்ந்து வாழ்தல். வெறும் போகப் பொருளாக இருந்த பெண்கள் இப்பொழுதுதான் உரிமைகளைப் பெற்று வருகின்றனர். இந்நிலையில் பெண்களால் பாடப்படும் கவிதைகள் பெரும்பாலும் நடுத்தர வர்க்கத்தின் சிக்கல்களையே பாடுபொருளாகக் கொண்டுள்ளன. வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற நிரந்தர சமூகப் பிரச்சனைகளையும் பெண்கள் தங்கள் கவிதைகளில் படைத்து வருகின்றனர். தொழிலாளர்களின் வாழ்கை நிலை உயர இனியாவது வழிவகைகளைத் தேட வேண்டும் என்ற வேட்கை பெண்களின் கவிதைகளில் இன்றும் காணப்படுகிறது என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

## References


Arundhati, (1989) Samathana pagaivarkal, Makkal kalai ilakkiya amaippu, France.

Chithalai Chathanar, (1999) Manimegalai, Kilakku Pathippagam, Chennai, India.

Chitra Devi, (1985) Weekly Magazine, Chennai, India.

Kanimozhi, K. (1995) Karuvarai vasanai, Thirumagal nilaiyam, Chennai, India.

Mathu Maalika, (1982) Puthu Geethai, Lotus Printers, Chennai, India.

Meenashi, R. (2012) Sudupookal, Lotus printers, Chennai, India.

Parimala Muthu, (1990) Ilia uthir kalam nirantharamalla, ilamurugu Pathippagam, Chennai, India.

Parimelzhagar, (2005) Thirukkural, Saradha Pathippagam, Chennai, India.

Uma maheswari, M. (1988) Suttum velisudar, Rathi Pathippagam, Chennai, India.

Vairamuthu, (1991) Vairamuthu kavithaikal, Surya Pathippagam, Chennai, India.

Vijayalakshmi, K. (1982) Kattrin Santhegam, Sivangangai Pathippagam, Sivangangai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License